சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 25.02.2025
SC.NO.197/2022
PW6 (Lw7) : ஜெயலெட்சுமி (வயது 62 ) க/பெ.முத்துகுமார்
(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
Crlmp.No.97/2023 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்க அனுமதிக்கபடுகிறார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வரைபடத்தில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். 2022 ஆம் வருடம் 4 ஆம் மாதம் எனது வீட்டிற்கு எதிர்புறம் போலிசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தபோது, நான் ரேசனுக்கு சென்றபோது என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி எனது வீடு என்பது தற்போது நான் குடியிருக்கும் வீடு இல்லை, அது எனது பழைய வீடு. அன்றைய தினம் எனது பழைய வீட்டிற்கு சென்றிருந்தேன். வரைபடத்தில் என்ன எழுதி இருந்தது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

எதற்காக என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் சாட்சிக்காக கையொப்பம் கேட்டார்கள். என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது.

**<u>மறு கு.வி</u>** - இல்லை

/ signed/
ஜெயலட்சுமி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி